ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1959/21 - 2016 මාර්තු 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.03.24

*1959/21 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்***

*பிரிவு 4(2) இன் கீழான பிரசுரிப்பு*

*இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் 'நிறுவகம்' என குறிப்பிடப்படும்) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 1995 ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரித்துள்ள மிகைஇலாப வரிக் கணக்கீட்டிற்கான மாற்றுக் கையாள்கைக் கூற்றை (SOAT) கடைப்பிடித்துள்ளது. இந்த மாற்றுக் கையாள்கைக் கூற்று உடனடியாக நடைமுறைக்கு வருகின்றது.*

*பேரவையின் கட்டளைப்படி,*

*அருண அல்விஸ்,*
*செயலாளர்.*

*இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்*
*இல: 30 A,*
*மலலசேகர மாவத்தை,*
*கொழும்பு 07.*
*2016, மாச்சு 24 ஆந் திகதி*

## *2015 ஆம் ஆணடின் 10ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பகுதி III இன்கீழ் மிகை இலாப வரிக் (super gain tax) கணக்கீட்டின் மாற்றுக் கையாள்கைக் கூற்று (SOAT)*

***முகவுரை***

*இலங்கை அரசாங்கம் நிதிச் சட்டத்தில் திருத்தங்களுக்கான சட்டவாக்கத்தினை அங்கீகரித்துள்ளதுடன், அது நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கு வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமத்தை பிரயோகிப்பதில் நேரடியான தாக்கத்தினை கொண்டுள்ளது.*

*இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் (CA ஸ்ரீலங்கா) குறிக்கோள், குறிப்பிட்ட சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்னிலைப்படுத்தலுடன் ஒத்திசைவதற்கு ஏதுவாக, நடப்பு நிதிக்கூற்றுக்களில் இந்தச் சட்டத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள மிகை இலாப வரியினை (Super gain tax) எவ்வாறு முன்னிலைப்படுத்துவது என்பதுபற்றி கம்பனிகள் மற்றும் தனிநபர்களுக்கு வழிகாட்டும் நோக்கத்தில் 2015 ஆணடின் 10ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பகுதி III இன்கீழ் மிகை இலாப வரிக் கணக்கீட்டின் மாற்றுக் கையாள்கைக் கூற்றினை நிர்ணயிப்பதாகும்.*

*நிதிச் சட்டத்தின் பகுதி III இன் பிரிவு 10(8) ஆனது, 'வேறு எந்த எழுதப்பட்ட சட்டத்திற்கும் எதிரான ஏற்பாடுகள் எதனையும் கணக்கிற்கொள்ளாது .....' எனக் குறிப்பிடுகின்றது. எனவே இந்த சட்டஏற்பாடு வேறு எந்தவொரு எழுதப்பட்ட சட்டத்தினையும் மேவி நிற்கின்றது. எனவே இந்தச் சட்டம் 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை மேவி நிற்பதனால், கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களில் இந்தச் சட்டத்தில் தேவைப்படுத்தியபடி வரியினை பிரதிபலிப்பதற்கு ஏதுவாக தற்போதைய நிதிஅறிக்கையிடல் வேலைச்சட்டகத்திற்கு மாற்றுக் கையாள்கைக் கூற்றினை வழங்கவேண்டிய தேவை இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு ஏற்பட்டுள்ளது.*

*இந்த மாற்றுக் கையாள்கைக் கூற்றானது LKAS 12 வருமான வரி நியமத்தின் பந்தி 46 இனை மேவி நிற்கின்றது. மேலும் இந்த நிதிச் சட்டத்தின் பகுதி III இன் கீழ் மிகைஇலாப வரி செலுத்தவேண்டிய பரிப்புடைய சகல கம்பனிகளும் வேறு மாற்று வழி இல்லாது இந்த மாற்றுக் கையாளகைக் கூற்றினை பிரயோகித்தல் வேண்டும்.*

***பரிந்துரை***

*2015 ஆண்டின் 10ஆம் இலக்க நிதிச் சட்டத்தின்கீழான சட்டத் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு இந்த சட்டத்தின்கீழ் மிகைஇலாப வரிப் பரிப்புடைய கம்பனிகள் அவற்றின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது கீழ்வருமாறு கணக்கிற் கொள்ளும்:*

*2013 ஏப்பிறல் 1 ஆந் திகதி ஆரம்பமாகும் வரிமதிப்பாண்டிற்கு அத்தகைய செலவுகள் செலவினமாகக் கருதப்படுவதனால், அவை நடப்பு நிதியாண்டின் முதல்நாளில் (அதாவது, திசெம்பர் மாதம் முடிவடையும் உரிமத்திற்கு 2015 சனவரி 1 /மாச்சு மாதம் முடிவடையும் உரிமத்திற்கு 2015 ஏப்பிறல் 1) உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்றில் அறிக்கையிட்ட ஆரம்ப கைக்கொள் இலாபத்திற்கு ஒரு செம்மையாக்கமாக பதிவுசெய்வதுடன், தேவையான வெளிக்காட்டல்களை மேற்கொள்ளும்.*

*மேலும், 2014 திசெம்பர் 31 /2015 மாச்சு 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்றினை திருத்திக்கூறாத வகையில் இந்தச் செம்மையாக்கம் முன்மொழியப்பட்டுள்ளது.*

**உதாரணம்: நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டல்கள்**

*2015 ஒற்றோபர் 30 இல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பகுதி III இன் ஏற்பாடுகளின்படி, கம்பனி ரூபா ...மில்லியன் மிகை இலாப வரிப்பரிப்பை கொண்டுள்ளது. சட்டத்தின்படி 2013 ஏப்பிறல் 1ஆந் திகதி ஆரம்பிக்கும் வரிமதிப்பாண்டு தொடர்புபட்ட நிதிக்கூற்றுக்களில் மிகை இலாப வரியானது ஒரு செலவினமாகக் கருதப்படும். இந்தச் சட்டம் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளை மேவுகின்றது. எனவே மிகைஇலாப வரிச் செலவானது, இந்தச் சட்டத் தேவைப்பாடுகளுக்கு அமைய, இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் 2015 நவெம்பர் 24 ஆந் திகதி வழங்கிய மிகை இலாப வரிக் கணக்கீட்டிற்கான மாற்றுக் கையாள்கைக் கூற்றில் பரிந்துரைத்தவாறு கணக்கிற் கொள்ளப்பட்டுள்ளது.*

*4-526*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.